**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**Trust OS No. 458/2024**
**PW1 – திரு. ஜடராயன் த/பெ. செங்காளகிருஷ்ணன்**
**26/03/2026**

<u>சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

**நேரம் 15.25 மணி**

28–11–2011 ல் வாதி டிரஸ்ட் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பதாக 18 ஷாப் மளிகை கடை என்று டிரஸ்ட் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் 2011 ல் டிரஸ்ட் பதிவு செய்யப்பட்ட பிறகு தான் வருகிறேன் சரிதான். வாதி டிரஸ்ட் பதிவுசெய்வதற்கு முன்பு 150 ஆண்டு காலமாக பதிவுசெய்யப்படாத அறக்கட்டளையாக இருந்தபோது யார் யார் உறுப்பினர்களாக இருந்தார்கள் அவர்கள் காலத்தில் என்ன செய்யப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2011 ல் அறக்கட்டளை பதிவுசெய்வதற்கு முன்பதாக இவ்வழக்கு சொத்து அறக்கட்டளைக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் கிடையாது. அறக்கட்டளைக்கு யார் வழக்கு சொத்தை கொடுத்தார்கள் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை பிரதிவாதியிடமிருந்து எங்கள் அறக்கட்டளைக்கு வரவேண்டுமென்பதற்காக வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அறக்கட்டளைக்கு வழக்கு எவ்வாறு கிடைத்தபோது என்ற ஆவணம் இல்லாதபோது பிரதிவாதியிடமிருக்கும் சொத்தை வாதியின் அறக்கட்டளைக்கு வேண்டுமென்று கேட்க எங்களுக்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களுடைய வாடகைதாரர். பிரதிவாதி எங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்துள்ளோமா என்றால் இல்லை. ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. 1965 ல் வாடகைக்கு வந்தபோது ஒப்பந்தம் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. 1965 ல் பிரதிவாதி 18 ஷாப் மளிகை கடையுடன் ஒப்பந்தம் போட்டதாக எந்த

ஆவணமும் இல்லை என்றால் சரிதான். அ அட்டவணை சொத்தாக 2 சொத்துக்களை எங்கள் அறக்கட்டளைக்கு சொந்தமானது என அறக்கட்டளை பதிவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திலிருந்து வரும் வாடகையை வைத்து தான் அறக்கட்டளையின் வரவு செலவுகளை கவனிக்க வேண்டும் என்று அறக்கட்டளை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியிடமோ அல்லது பிரதிவாதியின் தந்தையிடமிருந்து அறக்கட்டளை பதிவு செய்த காலத்திலிருந்து வாடகை வசூல் செய்ததாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் அவர் வாடகை கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தோம் என்பதற்காக நீதிமன்றத்தில் புகார் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.20 ல் புகார் நகல் இல்லை என்றால் சரிதான். மேற்படி வா.த.சா.ஆ.20 ல் இணைக்கப்பட்டுள்ள நகல் சென்னை மாநகராட்சிக்கு கொடுத்த கடிதத்தின் நகல் என்றாலும் அது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் நகல் அல்ல என்றாலும் அதை மாற்றி வைத்துவிட்டார்களா என்று தெரியவில்லை. வழக்கு சொத்து என்ன விதமான சொத்து என்றால் அது வீட்டுமனை ஆகும். நான் பட்டா மனை என்று சொல்வது தவறு என்றாலும் அது கிராம நத்தமாக இருந்தது என்றாலும் அது குறித்து எனக்கு சரியாக தெரியாது. வா.த.சா.ஆ.20 ல் மாநகராட்சிக்கு கொடுத்த மனுவின் அடிப்படையில் Town Survey Land Extract ல் அறக்கட்டளை பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பதாக யார் பெயரில் இருந்ததது என்றால் ரத்தனவேல் செட்டியார் பெயரில் இருந்தது. அவர் அறக்கட்டளையின் உறுப்பினர் என்பதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் யார் என்று தெரியாது அதற்கான ஆவணமும் இல்லை. 5 தலைமுறைக்கு முன்பதாக அவர் இருந்தார். அவர் 18 ஷாப் மளிகை கடை டிரஸ்ட் உறுப்பினராக இருந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 மளிகை கடை மெர்செண்ட் என்ற பெயரில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். ரத்தனவேல் செட்டியார் என்ற பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.2 ல் யாருக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.3 ல் 1975 ல் மாத வாடகை ரூபாய் 150 கொடுக்கவேண்டும் என்று அறிவிப்பு அனுப்பியதாக உள்ளது

அதன் ஒப்புகை அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.த.சா.ஆ.3 ஏற்படுத்தியபோது ஒப்பந்தம் இருந்ததா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.4 ல் வாடகை கட்டவேண்டும் என்று அறிவிப்பு கொடுத்தபின்னர் பதில் அறிவிப்பு 20-10-2007 கொடுக்கப்பட்டு அது வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் வாடகை கேட்பதற்கு வாதி அறக்கட்டளைக்கு உரிமை கிடையாது என்று எங்கள் உரிமையை மறுத்து பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாதி அறக்கட்டளைக்கு உரிமை இல்லை என்ற போது அதற்கு பதில் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கோ அல்லது அவரது வழக்கறிஞருக்கோ அனுப்பினோமா என்றால் அனுப்பியுள்ளோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளையை பதிவு செய்வதற்கு முன்பதாக அறக்கட்டளையின் சொத்து எங்களுக்கு உரிமையை வழக்கறிஞர் அறிவிப்பு மூலாமாக மறுத்துள்ளபோது அதற்கு நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் 2011 க்கு முன்பதாக நான் அறக்கட்டளையின் உறுப்பினராக இருந்தேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.6 ன்படி கிருஷ்ணமூர்த்தி என்பவர் யார் என்றால் அறக்கட்டளையின் உறுப்பினர் ஆவார். செங்காலகிருஷ்ணன் அறக்கட்டளையின் மற்றொரு உறுப்பினர் ஆவார். நான் அறக்கட்டளையை பதிவுசெய்வதற்கு முன்பதாக அறக்கட்டளையின் உறுப்பினராக இருந்தேன் என்று பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலோ கூறியிருக்கிறேனா என்றால் எனக்கு சரியாக தெரியாது. சாட்சி தற்போது குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். வா.த.சா.ஆ.6 நாங்களாகவே தயார் செய்து கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. திருவொற்றியூர் சங்கத்திலிருந்து எங்களக்கு அனுப்பியதாகும். வழக்கு சொத்தில் கேஸ் குடோன் நடத்தி வந்தார்கள் என்று பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் தெரியாது. வா.த.சா.ஆ.7 ன் படி வழக்கு சொத்து குறித்து 2009 ல் நித்தியானந்தம் நாகபூஷணம் பெயரில் செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.8 ன் படி நாகபூஷணம் அவருடைய இளைய குமாரர் சதீஷ்குமாருக்கு 2010 ஆம் வருடம் செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால் சதீஷ்குமார் அவருடைய மூத்த மகன் ஆவார். மேற்படி ஆவணங்கள் எழுதி

கொடுத்த பிறகு தான் வா.த.சா.ஆ.9 ல் அறக்கட்டளை பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் அ அட்டவணை சொத்தில் 2 ஆவது இன சொத்தாக வழக்கு சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறக்கட்டளை ஆவணம் எழுதும்போது அறக்கட்டளைக்கு சொந்தமானது என்பதற்கு பட்டாவோ, வேறு எந்த ஆவணமும் இல்லாதபோது மேற்படி சொத்து அறக்கட்டளைக்கு சொந்தமானது என எவ்வாறு ஆவணத்தில் எழுதப்பட்டது என்றால் ஜப்தி செய்த ஆவணம், வரி ரசீது ஆகியவற்றின் அடிப்படையில் பதிவு செய்தோம். ஜப்தி செய்த ஆவணம், வரி ரசீது ஆகியவற்றை அறக்கட்டளை பதிவு ஆவணத்தில் ஆதாரமாக சேர்த்தோமா என்றால் இல்லை. ஜப்தி செய்தபோது யாரிடமிருந்து ஜப்தி செய்தோம் என்ற விவரம் அறக்கட்டளை ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை ஆவணத்தின் படி அறக்கட்டளைக்கு வரும் வருமானத்திலிருந்து அறக்கட்டளையின் செலவினங்களை செய்துகொள்ள வேண்டும் என்றால் சரிதான். அதற்கான கணக்கு வழக்குகளையும் பராமரிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக பிரதிவாதி எங்களுக்கு வாடகை கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அறக்கட்டளைக்கான செலவு செய்தோம் என்றால் நயினப்ப நாயக்கர் தெருவில் உள்ள 4 கடைகளிலிருந்து வரும் வாடகையை வைத்து தான் செலவு செய்துவருகிறோம். அதற்கான கணக்கு எங்களிடமுள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ.10 ல் வழக்கு சொத்திற்கு 19-09-2023 அப்போது செலுத்தப்பட்ட வரி ரசீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு முன்பதாக இந்த சொத்து வாதி அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.14 ல் வில்லங்க சான்றிதழ் எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்கள் பெயரில் சொத்து உள்ளதா என்பதை பார்ப்பதற்காக தாக்கல் செய்தோம். எந்த வருடம் எந்த தேதிவரை வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சர்வே எண் 237/1 மற்றும் சர்வே எண் 79 ஆகியவற்றிற்கு 1-1-2009 முதல் 25-10-2023 வரை வில்லங்க சான்றிதழ் பெற்றுள்ளோம். வா.த.சா.ஆ 7 ல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 237/1 மற்றும் வா.த.சா.ஆ 8 ல் குறிப்பிடப்பட்டுள்ள அதே 237/1 சர்வே எண் என்றால் சரிதான்.

வில்லங்க சான்றிதழ் 1–1–2009 ல் போடப்பட்டிருக்கும் பட்சத்தில் 2 செட்டில்மெண்ட் ஆவணமும் வில்லங்க சான்றிதழில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் இடம்பெறவில்லை. அறக்கட்டளை பதிவுசெய்யப்பட்ட விவரம் மட்டும் தான் வில்லங்க சான்றிதழில் இடம்பெற்றுள்ளது. நாங்கள் பதிவு செய்த அறக்கட்டளை மட்டும் தான் வில்லங்க சான்றிதழில் இடம்பெற வேண்டும் என்று பெறப்பட்ட வில்லங்க சான்றிதழ் என்றால் சரியல்ல. 2009, 2010 ல் நாங்கள் பதிவுசெய்வதற்கு முன்பதாக ஏற்பட்ட 2 செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்படாமல் எவ்வாறு அறக்கட்டளையின் சொத்தாக வழக்கு சொத்து எவ்வாறு பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நான் பார்க்க வேண்டும். ஆள்பலத்தினால் மேற்படி அறக்கட்டளை பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பொய்யான பத்திரத்தை பதிவு செய்து கொண்டு எங்கள் ஆள்பலத்தினால் சென்னை மாநகராட்சிக்கு மனு கொடுத்து பட்டாவை எங்கள் பெயரில் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 2011 ல் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்ட பிறகு 15 வருடங்களாக சொத்தின் சுவாதினம் திரும்ப பெறுவதற்கு ஏதாவது முயற்சி எடுத்தோமா என்றால் உறுப்பினர்கள் உடல்நிலை சரியில்லாததால் காலதாமதம் ஏற்பட்டது. பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்தில் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் கூறியுள்ளோமா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்ய எங்களுக்கு எந்தவித முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்ட விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாமல் மற்றவர்கள் சொன்னதை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலதோஷத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எதுவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**நேரம் 16.15 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.